The Hon. Thiru P. U. SHANMUGAM : (a) Yes.

(b) Out of the 18 assignees, 4 persons are actually cultivating the land.

திரு. இ. எஸ். தியாகராாசன் : தலைவர் அவர்களே, பட்டா வழங்கப்பட்டுள்ள பல ஏழை எளிய விவசாயிகள் அவற்றைச் சாகுபடி செய்ய முடியாது சிலர் தடுத்திருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில் அதன்பேரில் என்ன நடவடிக்கை அரசு எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தடுக்கவில்லை. நீதி மன்றம் சென்று உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். இவை பற்றி நீதி மன்றம் தீர்ப்பு அளித்த பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : திருத்தணி வட்டத்தில் நமது கலைஞர் அவர்களுடைய அரசு நிலம் அற்ற ஏழை எளியவர்களுக்கு நிலத்தை வழங்கியிருக்கிறது. ஆனால் ஒரு சில கிராமங்களில் நிலம் படைத்த ஆதிக்கச் சக்திகள் இந்த ஏழை எளியவர்களுக்குப் பயிரிட முடியாதபடி இன்னல்கள், இடையூறுகள் விளைவித்து வருகிறார்களே, இதை அரசு தடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : எந்த இடத்தில் இதுபோல நடைபெறுகிறது என்று தெரிவித்தால் அரசு அதை விசாரித்து நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.

Urban Land Tax.

* 452. Q.—Thiru S. SANGAMUTHU THEVAR : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether urban land tax is collected from properties possessed by (i) Union Government and (ii) other State Governments; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) ஏனைய மாநில அரசுகளுக்குச் சொந்தமான நகர்ப்புற நிலங்கள், நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளின்கீழ் வரி விலக்கு பெற்றிருந்தாலொழிய, அத்தகைய நிலங்கள் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுவதற்கு உட்பட்டவையாகும். மைலாப்பூரில் ஆர்.எஸ். (மறு நில அளவை) 1832/26 எண்ணில் சுமார் முக்கால் மனையுள்ள நிலம் ஆந்திரப் பிரதேச அரசுக்குச் சொந்தமானது. இது பொதுக் காரியத்திற்குப் பயன்படுகிற நிலமாதலாலும், அதிலிருந்து எவ்விதமான வருமானமும் கிடைக்காததாலும், மேற்படி சட்டத்தின் 29(ஜி) பிரிவின்படி இந்த நிலம் நகர்ப்புற நிலவரி விதிப்பிலிருந்து விலக்கு பெற்றுள்ளது.

திரு. ஏ. எம். இராஜா : மத்திய அரசாங்கத்தினுடைய இடங்களுக்கு நகர்ப்புற வரி விதிப்பில் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது

1971 ஜூலை 26]

என்ருர்கள். ஆனுல் மத்திய அரசோ நமக்கு எத்தனையோ வரிகளை விதித்து வசூல் செய்து வருகிறது, அப்படி இருக்க மத்திய அரசு இடங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவைகள் எல்லாம் மத்திய அரசாங்கத்தின் சொத்தாக இருக்கிற காரணம் தான்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்போது ரயில்வேக்களுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய சொத்துக்களுக்கு நகரசபை வரி வசூல் செய்து வருகிறது. அரசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய பஸ் களுக்கு வரி விதித்து வருகிருேம். மத்திய அரசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இந்தச் சொத்துக்களுக்கு வரி விதித்தால் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏற்கனவே இருந்த சட்டத்தில் அப்படி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதன்படியே இப்போது விதிவிலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

தூர்வாரி புனரமைக்கும் இயந்திரங்கள்

* 453 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏரிகளில் தூர் எடுக்கும் கருவிகள் கோவை மாவட்டத்திற்கு எப்போது கொண்டு வரப்படும்?

(இ) இதுவரை எந்த எந்த மாவட்டங்களில் மேற்படி கருவி தூர் எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) தற்சமயம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 6 குளங்களை தூர்வாரி புனரமைக்கும் திட்டங்கள் ஆய்வில் உள்ளன. ஆய்வு முடிந்ததும் ஆவன செய்யப்படும்.

(இ) தூர் வாரி புனரமைக்கும் இயந்திரங்கள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் வேலை செய்துள்ளன—

(1) செங்கற்பட்டு.
(2) வடஆற்காடு.
(3) தென் ஆற்காடு.
(4) திருச்சிராப்பள்ளி.
(5) மதுரை.
(6) இராமநாதபுரம்.
(7) திருநெல்வேலி.

திரு. சு. துரைசாமி: கோவை மாவட்டத்தில் ஏராளமான ஏரிகள் தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன. விரைவில் அங்கே தூர் எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.